**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 91/2025**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பாண்டியராஜன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. கிருஷ்ணசாமி** | **Calling** | : | **காந்தி மார்க்கெட்டில் வியாபாரம்** |
| **Village** | : | **மேட்டுப்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **71** |
| | | | **Dated** | : | **23.10.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**எதிரி ஆஜர்.**

அ.சா. 2 (பட்டியல் சாட்சி 5), **திரு. பாண்டியராஜன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து காந்தி மார்க்கெட்டில் வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியாது. பட்டியல் சாட்சி – 1 பாலமுருகனைத் தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு

அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 04.07.2008ம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது, எங்கள் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் ராஜேஸ் என்பவர் பாலமுருகன், பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட செந்தில் மற்றும் வினோத் இருவரும் சேர்ந்து பரமேஸ்வரியிடம் பாலமுருகன் கள்ள தொடர்பு வைத்துள்ளதாக சந்தேகப்பட்டு, பாலமுருகனை சனீஸ்வரன் கோவில் தெரு முன்பு இடதுகை பெருவிரல், இடதுகை புஜம், கழுத்து, இடுப்பு ஆகிய இடங்களில் மாறி மாறி கத்தியால் குத்தி இரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றும், இரத்தகாயம் பட்டுகிடந்த பாலமுருகனை அவரது அம்மா லட்சுமி ஒரு போக்கு ஆட்டோவில் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் கொண்டு சேர்த்தார்கள் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 23.10.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..) Tmt.V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.